<u>2025 ஆகஸ்ட் மாதம் 28 – ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 26/2022</u>

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம் <u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – நாகராஜ் |
| தந்தை பெயர்: | சங்கர் |
| ஊர்: | ஜக்கம்பட்டி |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | வருவாய்துறை (தற்காலிக பணியாளர்) |
| வயது : | 36 |

<u>தேதி : 02.09.2025.</u>

<u>முதல் விசாரணை: –</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | 18.04.2021ம் தேதியிட்டு ஆண்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.164/2021 பிரிவுகள் 279, 337, 304ஏ இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.1.** |

| | |
|---|---|
| 2. | 19.04.2021ம் தேதியிட்டு எனது தந்தை சங்கரின் பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.2.** |
| 3. | 25.07.2021ம் தேதியிட்டு ஆண்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.164/2021 பிரிவுகள் 279, 337, 304ஏ இ.த.ச.ன்படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.3.** |
| 4. | இறந்துபோன எனது தந்தை சங்கர் என்பவரின் பிரேதத்தின் மீது மேற்கொண்ட பிரேத விசாரணை அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.4.** |
| 5. | ஆண்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.164/2021 பிரிவுகள் 279, 337, 304ஏ இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.5.** |
| 6. | 18.04.2021ம் தேதியிட்டு எனது தந்தை சங்கர் என்பவரின் இறப்புச் சான்றிதழ் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.6.** |
| 7. | இறந்துபோன எனது தந்தை சங்கர் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.7.** |
| 8. | எனது ஆதார் அடையாள அட்டையின் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.8.** |
| 9. | எனது வங்கி கணக்கு புத்தகத்தின் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.9.** |

நான் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR
Date: 2025.09.02 18:14:20 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
02.09.2025